www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவத் தேர்வு, 2023

பதிவெண் | | | | | | |

## X - தமிழ்

நேரம் : 1.30 மணி — மதிப்பெண்கள் : 50

(செய்யுள் - உரைநடை, இலக்கணம், கட்டுரை, கடிதம்)

### பகுதி - I (மதிப்பெண்கள் : 9)

***சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*** ***(9x1=9)***

1. 'எந்தமிழ் நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்
   அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன் இ) திருக்குறள் ஈ) நற்றிணை
3. பொருந்தும் விடை வரிசையைத் தேர்க.
   அ) கொண்டல் - 1. மேற்கு
   ஆ) கோடை - 2. தெற்கு
   இ) வாடை - 3. கிழக்கு
   ஈ) தென்றல் - 4. வடக்கு
   அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2
4. *"ஆலும் வேலும் பல்லுக் குறுதி*
   *நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"* - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக
   அ) ஆலமரம், வேப்பமரம் - ச.உ ஆ) அரச மரம், வேங்கை மரம் - கு.ந
   இ) ஆலமரம், வேலமரம் - ச.உ ஈ) வேப்பமரம், ஆலமரம் - ச,சா
5. சரியான விடையைத் தேர்ந்தெடு.
   கீழ்க்கண்டவற்றுள் சரியான தொடரைத் தேர்ந்தெடு.
   (1) முதல் தமிழ்க் கணினியின் பெயர் திருவள்ளுவர் ஆகும்
   (2) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா
   (3) 'பாவாணர் நூலகம்' ஒன்றை உருவாக்கியவர் இரா. இளங்குமரனார்
   அ) (1) மற்றும் (2) சரி ஆ) (2) மற்றும் (3) சரி
   இ) (1) மற்றும் (3) சரி ஈ) மூன்றும் சரி
6. பொது மொழியைத் தேர்வு செய்க.
   அ) கண்ணன் வந்தான் ஆ) எட்டு இ) படித்தான் ஈ) அம்மாஅ

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (7, 8, 9) விடை தருக.

*நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை*

7. 'பாடு இமிழ் பனிக் கடல் பருகி' என்னும் அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
   அ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல் ஆ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
8. 'நனந்தலை உலகம்' என்பதன் எதிர்ச்சொல்
   அ) அகன்ற உலகம் ஆ) மேலான உலகம் இ) கீழான உலகம் ஈ) சிறியஉலகம்
9. 'மாஅல், வளைஇ' - இலக்கணக் குறிப்பு தருக
   அ) இசை நிறை அளபெடை, சொல்லிசை அளபெடை
   ஆ) சொல்லிசை அளபெடை, இன்னிசை அளபெடை
   இ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
   ஈ) ஒற்றளபெடை, இசைநிறை அளபெடை

### பகுதி - II (மதிப்பெண்கள் : 12) பிரிவு - I

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி.

குறிப்பு : 14வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். *(3x2=6)*

10. குறிப்பு வரைக. அ) வசன கவிதை ஆ) விரிச்சி
11. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டுத் தருக.
12. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ) காசிக் காண்டம் என்பது காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்.
    ஆ) நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றவர் பாரதியார்.

3. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டு.
   'விடும்' என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிரிவு - II

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. *(3x2=6)*

15. 'உயிரளபெடை' எத்தனை வகைப்படும்? அவை யாவை?

16. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) தொடு - தோடு ஆ) மலை - மாலை

17. கலைச்சொல் தருக. அ) Folk Literature ஆ) Homograph

18. பழமொழியை நிறைவு செய்க. அ) அளவுக்கு ______ ஆ) உப்பில்லாப் ______

19. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக
அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்
ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

பகுதி - III (மதிப்பெண்கள் : 9)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

குறிப்பு : 24வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். *(3x3=9)*

20. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

21. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப் படுத்துதலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகின்றது?

22. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இரா. இளங்குமரனார் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் 'திருவள்ளுவர் தவச்சாலை' ஒன்றை அமைத்திருப்பவர். பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர். தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கி வருபவர். தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர். இன்றளவும் இவ்வாறே எழுதித் தமிழுக்குத் தனிப்பெரும் புகழை நல்கி வருபவர்.

அ) திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள ஊர் எது?
ஆ) இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைப் பெற்றவர்கள் யாவர்?
இ) பாவாணர் நூலகத்தை அமைத்தவர் யார்?

23. சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஒரு உரையாடல் அமைக்க.

24. அடிபிறழாமல் எழுதுக.
அ) *'விருந்தினனாக'......* எனத் தொடங்கும் 'காசிக் காண்டம்' பாடல். (அல்லது)
ஆ) *'சிறுதாம்பு'......* எனத் தொடங்கும் 'முல்லைப்பாட்டு' பாடல்.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 20) *(5x4=20)*

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

25. அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (அல்லது)



ஆ) மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

26. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)
ஆ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி கடிதம் எழுதுக.

27. அ) *தாளாண்மை என்னும் தகைமைக் கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னும் செருக்கு.*
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக. (அல்லது)
ஆ) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

28. அ) தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)
ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

29. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)
ஆ) 'அன்னமய்யா' என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப் பகுதி கொண்டு விவரிக்க.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com